2013 மே 2]

அமைத்துக் கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். போகம்பட்டி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் இருக்கின்றது. அதை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டும். ஏனெனில், இது முற்றிலுமாக விவசாயம் நிறைந்த பகுதி. அரசு விதிகளுக்குட்பட்டு இருக்கின்றது. ஆகவே, இங்கிருக்கின்ற கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கால்நடை கிளை நிலையத்தைத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கால்நடைகள் அலகுகள் 3,000 ஆக இருந்தால், கிளை நிலையமாக இயங்கும். அதுவே, 5,000 கால்நடைகள் என்று எண்ணிக்கை உயரும்போது, அது தரம் உயர்த்தப்படும் என்பது அரசின் விதி. அந்த அடிப்படையிலே, உறுப்பினர் சொல்கின்ற அந்தக் கிராமத்தில் இருக்கின்ற அந்தக் கால்நடை கிளை நிலையம், 5,000 கால்நடைகள் அலகுகளாக உயரும்போது, உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 375, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

375—

சார் பதிவாளர் அலுவலகம்

***34554—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூரில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2013 மே 2

பழுதடைந்துள்ள அரசு கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு வரும் 5 ஆண்டுகளுக்குள் சொந்தக் கட்டடம் கட்டுவதென மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, 2012-2013 ஆம் நிதியாண்டில், அரசாணை (நிலை) எண் 144, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 20-11-2012-ல், 29 சார் பதிவாளர் அலுவலகங்களுடன்கூடிய 17 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் மற்றும் அலங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலகம் உள்ளிட்ட 48 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு தனித் தனியே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதியும், ரூ.48.90 கோடி நிதி ஒதுக்கீடும் செய்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அதன்படி, அலங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு, கட்டடம் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் இயக்கம், ஜாதி, மத பேதம் இல்லாத, யாரும் வியக்கும் எழுச்சி இயக்கம். இந்த இயக்கத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளராக, ஓர் ஆல மரமாக வீற்றிருக்கும், நாங்கள் நித்தம் வணங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எழுச்சிமிக்க இந்த இயக்கத்தினுடைய தலைமையே! இருளடைந்த நாட்டில் ஒளி வெள்ளம் பாய்ச்ச அறிவுச் சுடராய், சுடரேந்தி ஆர்ப்பரித்து, அநீதியை வேரறுக்க இளைஞர் பாசறை கண்ட மாதர் குல மாணிக்கமே! எங்கள் குலசாமியே! அடிமட்டத் தொண்டனையும் அடையாளம் காட்டும் எதிர்கால இந்தியாவின் உயிர்நாடியே, நாளைய பாரதமே! (மேசையைத் தட்டும் ஒலி) வஞ்சகத்தை

2013 மே 2]

வெற்றிகொள்ளும் வரலாறு போற்றும் வல்லமைத் தலைவியே! கள்ளத்தனமும், சுயநலமும் கொண்ட காட்டுத்தர்பார் ஆட்சியின் அதிகார வெறியாட்டத்தை, தமிழ்ப் பண்பாட்டை அலட்சியப்படுத்திய சதிராட்டத்தை அடக்கி, எதிர்காலம் எங்கே என ஏங்கித் தவித்த தமிழகத்தின் ஏக்கத்தைப் போக்க வந்த ஆக்கப்பூர்வ தலைவியே! வாழும் மனித தெய்வமே, துயர் அனைத்தும் துடைத்தெறிவார் எவர் என ஏங்கி நின்ற ஏழைகளை கௌரவிக்கும் அருமருந்தே!

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. மு.வீ. கருப்பையா: *அன்னைத் தமிழகமே, எந்நாளும் போற்றி வணங்கக்கூடிய தாயே! உங்களை வணங்குகிறேன். கும்பிட்ட கரங்கள் விலகும் முன்பே, அந்தத் திட்டத்தினுடைய குறையறிந்து, அதை உடனடியாகத் தீர்த்து வைக்கும் வல்லமை படைத்த ஆற்றல் மிகுந்த எங்கள் அம்மா வாழும் இந்த நன்னாளில் நாங்களும் வாழ்வதை எண்ணி, பெருமைப்படுகிறேன். அலங்காநல்லூரில் சார் பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கை, மனுவாகக் கொடுக்கப்பட்டவுடன், அதை நிறைவேற்றி, அந்த மனு பரிசீலனைக்கு வரும் முன்பாகவே கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன என இந்த நேரத்தில் சொல்லிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், வாடிப்பட்டி சார் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலகம், மதுரை பிரிவு மண்டலம், மதுரை வடக்கு பதிவு மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. மதுரை வடக்கு பதிவு மாவட்டத்தில் 10 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில், 6 அலுவலகங்கள் அரசு*

கட்டடங்களிலும், 4 அலுவலகங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. அவற்றில் அலங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

அதேபோல, வாடிப்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக இடம் கோரப்பட்டுள்ளது. இடம் கிடைத்தவுடன், உடனடியாக பணிகள் தொடங்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 376, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

376—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***936—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் வட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், 4,551 போக்குவரத்து வாகனங்களைக் கொண்டு, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் தற்போது இயங்கி வருகிறது. எனவே, ஒரே சட்டமன்றத் தொகுதியில்